பதிவு எண்: M. 6311 ★ தோற்றம்: 51331 திராவிடர்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.எல்.

மலர்: 16] சென்னை: புரட்டாசி 17 (3—10—68) வியாழன் ★ வெளியூர்: புரட்டாசி 18 (4—10—68) வெள்ளி [இதழ்: 89

முதல் முதலாக 88 பேருக்குக் குடியுரிமை

கொழும்பு, அக். 3— இந்திய வம்சாவழியினரைச் சேர்ந்த 88 பேர்களுக்கு இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைக் குடியுரிமை வழங்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தத்தின்படி இந்தியா இது வரையில் சுமார் 20,000 பேர்களுக்குக் குடியுரிமை வழங்கியிருக்கிறது.

இலங்கை முதல் தடவையாக இந்த 88 பேர்களுக்குத்தான் குடியுரிமை வழங்கியிருக்கிறது.

இந்தியா 5.25 இலட்சம்பேருக்கும், இலங்கை 3-இலட்சம்பேருக்கும் குடியுரிமை வழங்க வேண்டுமென்பது ஒப்பந்தத்தில் மாகும். 15-ஆண்டுகளில் இதை நிறைவேற்ற வேண்டுமென்பதும் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சித் தேர்தல்

வேட்பு மனுத் தாக்கல்

கழக வேட்பாளர்கள் கவனிக்க:

அக்டோபர் 3, 4, 5 ஆகிய நாட்களில் காலை 11 மணிமுதல் 3 மணிவரை நகரில் 12 இடங்களில் 120 வட்டங்களுக்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யலாம்; மூன்று நாட்களுக்குள் தாக்கல் செய்யவேண்டும்.

மனுக்கள் அக். 7-ம் நாள் பரிசீலனை செய்யப்படும்; எதிர்ப்பு எதுவும் இல்லாவிட்டால் திரும்பப் பெறுவதற்கான கடைசி நாளாக அக். 10-ம் நாள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எதிர்ப்பு இருந்தால் வேட்பு மனுக்களைத் திரும்பப்பெற அக். 14 கடைசி நாளாகும்.

கீழ்க்காணும் 12 தேர்தல் அதிகாரிகள் வேட்பு மனுக்களைப் பெற்றுக்கொள்வர்:—

1 முதல் 10 வட்டங்கள் வரை:— தொழில் வணிகத்துறை இயக்குநரின் நேர்முக உதவியாளர் அலுவலகம், சேப்பாக்கம்.

11 முதல் 20 வட்டங்கள் வரை:— சென்னை மாநகராட்சி உதவி ஆணையர் (வடக்கு அலுவலகம்), ரிப்பன் கட்டிடம்.

21 முதல் 30 வட்டங்கள் வரை:— ஆணையரின் நேர்முக உதவியாளர் அலுவலகம், ரிப்பன் கட்டிடம்.

31 முதல் 40 வட்டங்கள் வரை:— நிலம் கையகப்படுத்தும் உதவி கலெக்டர் மாநகராட்சித் திட்டங்கள், கலெக்டர் அலுவலகம்.

41 முதல் 50 வட்டங்கள் வரை:— நிலம் கையகப்படுத்தும் உதவி கலெக்டர், புறநகர்த் திட்டங்கள், கலெக்டர் அலுவலகம்.

51 முதல் 60 வட்டங்கள் வரை:— டைரக்டர் ஆப் செட்டில்மெண்டு, நேர்முக உதவியாளர், சேப்பாக்கம்.

61 முதல் 70 வட்டங்கள்வரை:— டி. எஸ். ஓ., கலெக்டர் அலுவலகம்.

71 முதல் 80 வட்டங்கள்வரை:— டி. டபிள்யூ ஓ கலெக்டர் அலுவலகம்.

81 முதல் 90 வட்டங்கள்வரை:— (கடன்பிரிவு) தனி உதவி கலெக்டர், சேப்பாக்கம்.

91 முதல் 100 வட்டங்கள்வரை:— மாநகராட்சி உதவி ஆணையாளர் (தெற்கு) ரிப்பன் கட்டிடத்தின் பின் பகுதி.

101 முதல் 110 வட்டங்கள்வரை:— விவசாய இயக்குநரின் நேர்முக உதவியாளர், சேப்பாக்கம்.

111 முதல் 120 வட்டங்கள்வரை:— கலெக்டரின் நேர்முக உதவியாளர், கலெக்டர் அலுவலகம்.

'மாநிலத்தை விட்டு வெளியேறுக'

பத்திரிகையாளருக்கு உத்தரவு!

அரிஸ் சண்டோலா எனும் முதிர்ந்த பத்திரிகையாளர் ஒருவரை, மாநிலத்தை விட்டு வெளியேறுமாறு நாகாலாந்து அரசு உத்தரவிட்டிருக்கிறது.

கடந்த நான்காண்டுகளாக இங்கு வாழ்ந்துவரும் இவர், உடனடியாக வெளியேறிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

இவரது நடவடிக்கைகள், மாநிலத்துக்கு எதிரான வகையில் இருப்பதாகவும், இதனாலேயே இவர் வெளியேற வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அரசுத் துறையைச் சேர்ந்த ஒருவர் கூறினர்.

'தமிழும் ஆங்கிலமும் போதும்'

'மற்றெருரு அயல் மொழி தேவையில்லை'

'தாய்மொழிக்கு முதலிடம்தரத் தயக்கம்வேண்டாம்'

பேராசிரியர் மு. வரதராசனார் வலியுறுத்தல்

செங்கற்பட்டு, அக். 3—

"நாடு -- மொழி -- மக்கள் என்ற மூன்றில், நாட்டையும் -- மக்களையும் இணைப்பது மொழிதான். தாய் மொழிக்கு நாம் முதலிடம் தரவேண்டும். இதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

'தாய் மொழிக்கு நாம் தொண்டு செய்ய வேண்டும்; அந்தத் தாய் மொழியான தமிழுக்கு ஆற்றவேண்டிய பணியினை -- தமிழ் உணர்வை உணருகின்றவர்கள் இன்று ஆட்சியில் இருக்கிறார்கள்.

'தாய்மொழியைப் பற்றி முதலில் பேசிய நாடு, தமிழ் நாடு! ஆனால் தாய் மொழிக்கான வேலைகளை முதலில் வடநாடு செய்கிறது!

"மக்கள் ஆட்சி தொடர்ந்து நீடிக்குமானால் -- சனநாயகம் தொடர்ந்து இருந்தால் -- நிச்சயமாக எதையும் தாய் மொழியில் படிக்கும் நிலை வந்தே தீரும்! எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும், தாய் மொழிக்கு முதலிடம் தராத நாடே இல்லை!

"ஒருவன் எவ்வளவுதான் படிப்பட்டாலும் அறிவு வளர்ச்சி பெறவேண்டுமானால், அதை அவன் தாய் மொழியின் மூலம்தான் பெற முடியும்"

என்று, டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், செங்கற்பட்டில் நடைபெற்ற தமிழகப் புலவர் குழுவின் வெள்ளி விழாக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். அவர் மேலும் பேசியதாவது:—

"மாற்றார் கருத்துக்களை அறியத் தன் மொழி தேவை; அதற்கு ஆங்கிலம் வேண்டும்.

நம்முடைய கருத்துக்களை நாம் சொல்லும்போது தமிழில்தான் சொல்லவேண்டும்; அந்தத் தெளிவு நம்மிடையே பிறக்க வேண்டும்.

மற்ற மொழிக்காரர்கள், ஆங்கில அறிவு பெற்றவர்களின் கருத்தை உணர ஆங்கிலம் வேண்டும்.

என் கருத்தை நான் சொல்ல வேண்டும் என்றால், தமிழில் தான் சொல்வேன்; ஆங்கில

(4-ம் பக்கம் பார்க்க)

****

சென்னை மாநகராட்சித் தேர்தல்

கழக வேட்பாளர்களுக்கு அறிவிப்பு

சென்னை மாநகராட்சித் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்களாக 1—10—68-இல் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள தோழர்கள் அனைவரும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளபடி ரூ. 150-ஐத் தேர்தல் கழகத்தில் 4—10—68 மாலை 6-மணிக்குள் செலுத்தித் தங்கள் தங்கள் தேர்வினை உறுதி செய்து கொள்ளுமாறு இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
தலைவர், ஆட்சிமன்றக் குழு

மாநகராட்சித் தேர்தல்:

கழகக் கட்டுப்பாட்டை மீறுபவர்களுக்குத் தலைமைக் கழக எச்சரிக்கை

சென்னை மாநகராட்சித் தேர்தலில் தோழமைக் கட்சிகளுடன் உடன்பாடுகொண்டும், கழக வேட்பாளர்களை நிறுத்துவது பற்றி முடிவு செய்தும் வெளியிடப்பட்டுள்ள தலைமைக் கழகப் பட்டியலுக்கும் --- அறிக்கைக்கும் மாறுகச் செயல்படத் தொடங்குகிற கழகத்தின் எந்த அமைப்பாலுலும், சார்பு மன்றங்களாலுலும், தனிப்பட்ட கழக உறுப்பினர்களாலுலும், கழக வெற்றிக்கு மறைமுகமாகக் குந்தகம் விளைவிக்க முயலுபவர்களாகக் கருதி, அவர்கள் மீது தலைமைக் கழகம் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, கழகக் கட்டுப்பாட்டுக்கு மாறுகச் செயல்பட முனைந்திருப்பவர்கள் யாராயிருப்பினும், கழகத்தின் எந்த அமைப்பாக இருப்பினும் இந்த அறிக்கையைக் கண்டதும் தங்களின் நடவடிக்கைகளிலிருந்து திருந்திவிட்டதாகத் தலைமைக் கழகத்திற்கு உடனடியாக எழுத்து மூலமாக அறிவித்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்
தலைவர், ஆட்சிமன்றக் குழு

லால்பகதூர் பிறந்த நாள் விழா

புதுடில்லி, அக். 3— மறைந்த தலைமை மைசர் லால்பகதூர் சாஸ்திரியின் 65-வது பிறந்த நாள் விழா இங்கு நடைபெற்றது.

இதையொட்டி நடைபெற்ற கூட்டமொன்றில், குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன், மற்றும் மத்திய அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநகராட்சித் தேர்தல்

20-வது வட்ட (கச்சாலீசுவரர்) கழக வேட்பாளர்

சென்னை, அக். 3— சென்னை 20-வது வட்டத்தில் (கச்சாலீசுவரர்) கழக வேட்பாளராகத் தோழர்

வி. பொன்னுசாமி

போட்டியிடுவார்.

★

சுதந்தரக் கட்சி

தோழமைக் கட்சியான சுதந்தரக் கட்சியுடன், உடன்பாடு கொண்டுள்ள வட்டங்கள் வருமாறு:—

6. நாராயணப்ப நாயக்கன் தோட்டம்
18. சவுகார்பேட்டை
31. கொசப்பேட்டை
95. மயிலாப்பூர்
102. கீழ்ப்பாக்கம்
105. தியாகராயநகர்
116. காமராஜ் நகர்

இரா. நெடுஞ்செழியன்
தலைவர், ஆட்சி மன்றக் குழு

மனித குலத்துக்கு வழிகாட்டியவர்!

காந்தியடிகள் நம்மைவிட்டுப் பிரிந்து, 20 ஆண்டுகளுக்குள்ளேயே பெரும்பாலானவர்கள் இலட்சிய வாதத்தில் களைப்புற்றிருப்பதையும், அவரது அறிவுரைகளுக்கு அதே அளவு மதிப்பைக் கொடுப்பதில்லை என்பதையும் காண்கிறோம். 'அவர் காட்டிய வழியிலிருந்து நாம் விலகிச் சென்றுவிட்டோம்' என்று சிலர் கருதுகிறார்கள்; மிக விரைவிலேயே இந்தப் போக்கின் திசை மாறும்' என்று மற்றவர்கள் எண்ணுகிறார்கள்.

அடிப்படை நெறிகளை சாதாரண மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமானால், அவை எதைப் பொறுத்து இருக்கின்றன என்பதை ஆராயவேண்டியது அவசியமாகும். பெரும்பாலானவர்கள் கைமாறாக பொருள் வளத்தை எதிர்பார்க்கிறார்கள் என்றாலும், ஒரு சிலர், தங்களுக்குள்ளாகவே வாழ்க்கையின் இந்த அடிப்படை நெறிகளைப் பின்பற்றுகிறார்கள்.

நமது வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ள காந்தியின் தூய்மையான வாழ்வையும், அறிவுரைகளையும் நாம் மறக்கக்கூடாது என்று நம்புவோரில் நானும் ஒருவன். நமது அறிவைத் தவிர்க்க வேண்டுமாயின் அவற்றை மறக்கக்கூடாது.

இந்தியாவின் வலிமையையும், வளமையையும் மகிழ்ச்சியையும் வளர்ப்பதற்காக நாம் எந்த முறையைக் கையாண்டாலும், நாம் அவரது அறிவுரைகளின் அடிப்படையில்தான் நமது இலட்சியங்களுக்காகப் பாடுபட வேண்டும்.

காந்தி கூறியவைகளும், செய்த காரியங்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கானவை மட்டுமல்ல -- இந்திய மக்களுக்கானவை மட்டுமல்ல -- எல்லாக் காலத்துக்கும், மனித குலம் முழுவதற்கும் அவரது அறிவுரை பொருந்தும். காந்தியடிகளின் சிறப்பு இயல்பை நாம் இவ்வாறுதான் அணுக வேண்டும்.

துணைத் தலைமையமைச்சர்
மொரார்ஜி தேசாய்

ஒரு நாட்டின் வரலாற்றில் 100 ஆண்டுகள் என்பது அதிகமாக இரா; ஆனால், இந்தியாவின் வரலாற்றில் கடந்த 100 ஆண்டுகள் மிகவும் முக்கியமானவையாகும்.

பல ஆண்டு அடிமைத் தளைக்குப் பிறகு விடுதலை பெறுவதற்கு உதவி செய்த இந்தியத் தேசிய வாதம் இந்த 100 ஆண்டுகளில் உருவாயிற்று என்பதோடு, இந்தக் காலத்தில்தான் காந்தி மனித குலத்தின் நம்பிக்கைக்கு பொருளும், விசுவாசமும் வழங்கி இந்த இலட்சியத்திற்காக வாழ்ந்து பணியாற்றினார்!

1869-ல் காந்தி பிறந்தபோது, இந்தியா கொடுமைக்குள்ளான ஓர் ஏழை நாடாக இருந்தது! இந்தியர்கள் அடிபணிந்து மூட நம்பிக்கை கொண்டு கோழைகளாக -- பலவீனத்துடன் இருந்தார்கள்! இந்திய சமூகம், குறுகிய மனப்பான்மை கொண்டதாக இருந்தது! நாட்டுப் பற்று இருக்கவில்லை! நம்பிக்கையே இருக்க முடியாத அளவுக்குப் பிரிந்திருந்தது!

1888-ல் இங்கிலாந்துக்குக் கப்பலில் புறப்பட்டபோது, பல்கலைக் கழகக் கல்வி நன்றாகப் பரவி வந்தது; சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பரவின; நகர்ப் புறங்களில் அரசியல் உறவு வளர்ந்து வந்தது.

1885-ல் இந்தியத் தேசியக் காங்கிரசு அமைக்கப்பட்டது; தென் ஆப்பிரிக்காவில் அடிமை வேலை செய்யும் இந்தியர்களுக்காக வெற்றியுடன் போராடிய பிறகு, அங்கிருந்து 1915-ல் இந்தியாவுக்கு காந்தி திரும்பிவந்தபோது, இங்கே பெரும் அளவுக்கு அரசியல் உணர்வும், ஏராளமான அரசியல் கட்சிகளும் இருப்பதை அவர் கண்டார்; தாராள வாதம், தீவிரவாதம், குழப்பவாதம் ஆகியவற்றைப் பின்பற்றும் அரசியல் கட்சிகள் இருப்பதைக் கண்டார். அதே சமயம், ஒரு சராசரி இந்தியர் முன்பிருந்ததைப்போலவே கோழையாக -- அடிபணிந்திருந்தார் என்பதையும், இந்தியச் சமூகம் மூடநம்பிக்கை கொண்டு துண்டு துண்டாகப் பிரிந்திருந்தது என்பதையும், நாடு கொடுமைக்குள்ளாகி வளம் குன்றி இருந்தது என்பதையும், கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டு கேட்பாரற்றுக் கிடந்தன என்பதையும அவர் உணர்ந்தார்.

இந்தியாவின் பிரச்சினை, அரசியல் அல்லது பொருளாதாரம் சம்பந்தப்பட்டது மட்டுமல்ல என்றும், அது ஒரு பலதுறைப் பிரச்சினை என்றும் அவர் உணர்ந்தார்; 'பல நூற்றாண்டுகள் அடிமைத் தளையில் வாழ்ந்ததனால் ஏற்பட்ட அடிமை மனப்போக்கிலிருந்து மக்களை விடுவிப்பதற்கு அவர்களுக்கு வீரத்தையும் சுயமரியாதை உணர்வையும் ஊட்ட வேண்டும்' என்று கண்டார்.

அந்த நிலைமை மாறவேண்டுமானால், இந்திய மண்ணில் வாழும் மக்களின் திறமைக் கேற்பக் கல்வியும், சமூகச் சீர்திருத்தமும், பொருளாதாரமும், அரசியலும் அமையவேண்டும் என்பதை அவர் உணர்ந்தார்.

அடுத்த 30 ஆண்டுகளில் காந்தியடிகள் இடைவிடாமல் பாடுபட்டு, நாட்டில் அமைதிப் புரட்சியை ஏற்படுத்தினார்.

அன்றுவரை பின்பற்றப்பட்டு வந்த பயங்கர முறைக்குப் பதிலாக, சுதந்தரம் பெறும் பொருட்டு நடைமுறையை வகுத்துத் தந்தார். இதன் பலனாக, அரசியல் உணர்வு தொலைதூரக் கிராமங்களுக்கும் பரவியது; சுதந்தரப் போராட்டத்திற்கு ஒரு பரந்த அடிப்படையைக் கொடுத்தது; கல்விக்கு ஒரு புதிய பொருளும் நோக்கமும் கிடைத்தன; சமூக வாழ்வு மேலும் சுதந்தரம் பெற்றது; அறநெறி ஊக்கம் பெருகியது; அவர் நம்மை, மண்ணிலிருந்து தூக்கி எடுத்து மனிதர்களாக்கினார்!

அதுவரையில் சுதந்தரத்துக்கான விருப்பம் வலிமை பெற்றுவந்த போதிலும், அதை அடைவதற்காக ஒருவரும் வழி காட்டவில்லை. காந்தி ஒத்துழையாமை இயக்கத்தைத் தென்னாப்பிரிக்காவில் ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். சுதந்தரத்தை அடைவதற்காக இந்தியத் தேசியக் காங்கிரசின்மூலம் அவர் அந்தக் கருவியை நம் நாட்டுக்கு வழங்கினார்.

இந்தச் சமயத்தில், ஒரு மனிதனால் எந்த அளவுக்கு உயர முடியுமோ, அந்த அளவுக்கு அறநெறி -- ஆன்மீகத் துறைகளில் காந்தி உயர்ந்தார். ஒரு பயந்த குழந்தையாக இருந்த காந்தி, அவரது காலத்தில் ஒரு மாமனிதராகத் திகழ்ந்தார்!

மக்களைப் பொறுத்தவரை காந்தியைப் புரிந்துகொள்வது எளிதாக இருந்தது. ஏனெனில் அவர்களது மொழியில் அவர் பேசினார்; அவர்கள் வாழ்ந்ததைப்போல மிகவும் எளிமையாக வாழ்ந்தார். விடுதலைப் போராட்டத்தில் மக்களையும் கலந்துகொள்ளச்செய்யும் முயற்சியில் இவ்வாறு வெற்றி கண்டார். ஊழியர்களைச் சேர்த்தார்; தலைவர்களை உருவாக்கினார்; அவர்கள் வழியையும் தம் வழியாக்கிக் கொண்டார். இத்தகைய கருத்துப் பரிமாற்றங்களின்மூலம் சுதந்தரப் போராட்டத்தில் ஒற்றுமையை உருவாக்கினார். அதற்குமுன் எப்போதும் இத்தகைய ஒன்றுபட்ட கருத்து நிலவியதில்லை.

இந்தியாவின் சுதந்தரப் பேறு, அவரது வெற்றியின் ஒரு வெளிப்படைத் தோற்றமேயாகும். நமது ஆத்மாவைத் தூண்டிவிட்டு -- நமது உள்ளத்துக்கு அறிவூட்டி -- நமக்கு அற வீரத்தைப் புகட்டியதுதான் அவரது உண்மையான வெற்றி!

நாம் பொருள் வளம் பெற்றுவிடலாம்; ஆனால், நம்முன் இருக்கும் அறநெறி ஆற்றலை அது அழித்துவிட்டால், பொருள் வளத்துக்கு அர்த்தமில்லாமல் போய்விடும்!

வளமிக்க சமூகங்கள் பலவற்றைக் காண்கிறோம்; ஆனால், மகிழ்ச்சியுற்ற சமூகங்கள் சிலவற்றையே பார்க்கிறோம்!

பொருள் வளம் மட்டும் இருந்தால் மகிழ்ச்சி கிடைத்துவிடாது; மனத் திருப்தியில் இருந்துதான் மகிழ்ச்சியும் ஏற்படும்!

ஒன்றுக்கொன்று போட்டியிடும் ஆசைகளில்லாமல் அறநெறிகளின் அடிப்படையில் ஆத்மீக வேட்கையை நோக்கமாய்க் கொண்டு ஒரு நல்வாழ்வு வாழ்ந்தால்தான் இதைப் பெற முடியும்!

மனித மகிழ்ச்சியின் அடிப்படையில்தான் காந்தியடிகள், முன்னேற்றத்தை மதிப்பிட்டார். 'மிக அதிகமானவர்களுக்கு, மிக அதிகமான நலன்' என்ற பலனைக் குறிக்கோளாகக் கொண்ட தத்துவ வாதத்தை அவர் ஏற்கவில்லை! பொருள் வளப் பெருக்கத்தை மட்டுமே முன்னேற்றத்தின் மதிப்பீடாகக் கொள்ளும் வளமிக்க சமூகத்தின் இன்றையக் கருத்தையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை!

எல்லோருக்கும் நன்மை பயக்கக் கூடிய சமூக முறைமையை அவர் விரும்பினார்; அதாவது, 'சர்வோதய' முறையை அவர் விரும்பினார்; எல்லோருக்கும் சமவுரிமையையும் சம வாய்ப்பும் உள்ள ஒரு சமூகத்தையே அவர் விரும்பினார்; 'பொருளாதார வளர்ச்சியும், சமூக நீதியும் சேர்ந்திருக்கக்கூடிய எளிமையான சமூகம் வேண்டும்' என்று ஆசைப்பட்டார்; 'புலன்களால் கிடைக்கும் இன்பத்தை நாம் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று அவர் கூறினார்; ஏனென்றால், 'இத்தகைய இன்பத்திற்கு எல்லையில்லை' என்று அவர் கருதினார்.

'படை பலத்திற்கு எதிராக இருக்கும்போதுகூட, மனிதனுக்கு வெல்ல முடியாத ஆன்மீக வலிமை உண்டு' என்பதை காந்தி உலகுக்கு மெய்ப்பித்துக் காட்டினார்.

'பொருள் வளத்துக்கு எதிராக அறநெறிகளுக்கும், தன்னலத்துக்கும் — பொருளாசைக்கும் எதிராக சேவைக்கும் தியாகத்துக்கும் ஆற்றலுண்டு' என்பதை அவர் மெய்ப்பித்தார்.

உண்மையின் எழிலையும், மனித உயிரின் புனிதத் தன்மையையும் அவர் நமக்கு அறிவுறுத்தினார்.

காந்தியார் பொருள்வளப் பெருக்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை; 'எந்தவிதச் சூழ்நிலையிலும், இயந்திரங்களை பயன்படுத்தக் கூடாது' என்று கூறவில்லை; 'இயந்திரங்கள் ஒரு பிரிவினருக்காக மட்டும் நேரத்தையும், உழைப்பையும் மிச்சப்படுத்தாமல் எல்லோருக்குமாக இதைச் செய்ய வேண்டும்' என்று அவர் கருதினார்; 'மனிதன், இயந்திரத்தின் அடிமையாகக் கூடாது' என்று கருத்துத் தெரிவித்தார்; 'இப்படி அடிமையாகி விட்டால், தனித்தன்மையை இழந்துவிட நேரிடும்' என்று எச்சரித்தார்; 'மனிதனுக்காக இயந்திரங்களே தவிர, இயந்திரங்களுக்காக மனிதனல்ல' என்று கருதினார்.

சொத்தும், அதிகாரமும் ஒரு சிலரிடம் மட்டும் குவிந்து கிடப்பதை அனுமதிக்க முடியாத அளவுக்கு சமூக நீதி உணர்வு பெற்றிருந்தார். அதே சமயம், 'செல்வத்தையும் அதிகாரத்தையும் சம அடிப்படையில் விநியோகிக்க முடியாது' என்று அவர் அறிந்திருந்தார்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும், அரசியல் இயலாமையையும் குறைக்கும் பொருட்டு, 'நியாயமான விநியோகம் வேண்டும்' என்றார்.

முதலாளித்துவ சமூகம் ஒன்றை சோஷலிச சமூகமாக மாற்றும் பொருட்டு, பொது நிதி நிறுவன முறை ஒன்றை வகுத்தார்; இந்த முறை, முதலாளித்துவத்தை ஏற்றுக்கொள்வதில்லை; ஆனால் முதலாளிகளை ஒழிப்பதற்குப் பதிலாக, அவர்களது மனப்போக்கை மேலும் சீராக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கிறது! 'அவர்கள், தங்கள் செல்வத்தை, மக்களுக்கான நிதி நிறுவனமாக வைத்துக்கொண்டு சொந்த சுகத்துக்காக மட்டுமன்றி, சமூக நலனுக்காகப் பயன்படுத்த வேண்டும்' என்று காந்தி விரும்பினார்.

குறிப்பிட்ட காந்தீயக் கோட்பாடு எதையும் காந்தியடிகள் விட்டுச் செல்லவில்லை! காந்தியின் வாழ்க்கை அவரது கோட்பாட்டை எதிரொலிக்கிறது! எல்லா மனித உள்ளங்களும் விரும்பி ஏற்கக்கூடிய அடிப்படைக் கோட்பாடு அது! பல தலைமுறைகளுக்கு இது, மனித குலத்துக்கே வழிகாட்டும்!

அவரது பொருளாதார கோட்பாட்டையோ, செயலான திட்டத்தையோ ஒருவேளை கல்வி அறிவு பெற்ற நகரவாசிகள் ஏற்றுக்கொள்ளாமலிருக்கலாம்; ஆனால், சாதாரண மக்கள் அனைவரும், அவரது வாழ்க்கையிலிருந்தும், கோட்பாட்டிலிருந்தும் ஊக்கம் பெறுவார்கள்.

காலத்தையும் நிலப்பரப்பையும் கடந்து நிலையானதாக இருக்கும் அவரது கோட்பாடு, இலட்சக்கணக்கான உள்ளங்களில் குடிகொண்டிருக்கிறது!

மனித குலத்திற்கு வேறு நல்வழி எதுவும் இல்லை என்றே நான் கருதுகிறேன். அணு ஆயுதங்கள் இருப்பதால், உலகில் மனிதன் பீதியுற்றிருக்கிறான்! 'ஆக்கபூர்வமான செயலுக்கு வாய்ப்பு இல்லை' என்ற உணர்வு, மனிதனை திடுக்கிடச் செய்திருக்கிறது! ஆதலால், மனிதன் உயிர் வாழ வேண்டுமானால், காந்தியைப் பின்பற்ற வேண்டும்!

—புதுடில்லி காந்தி அமைதி நிறுவனம் வெளியிட்டுள்ள 'மகாத்மா காந்தி—100 ஆண்டுகள்' என்னும் புத்தகத்திலிருந்து.

இறவாத மாமனிதர்

மாமனிதர்கள் ஒருபோதும் இறப்பதில்லை! அவர்களது பணி வாழ்ந்துகொண்டே இருக்கும்!

காந்தியார் நம்மிடையே இல்லையென்றாலும், அவரது நற்பணியும் மனித நலனுக்காக அவர் செய்த தியாகமும் நமது அன்றாட வாழ்க்கையில் சிறியோருக்கும் பெரியோருக்கும், சிறுவருக்கும் முதியோருக்கும் என்றுமே நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கும்!

எத்தியோப்பிய மன்னர்
ஹெய்லி செலாசி

சுதந்தர மக்களும், சுதந்தரத்தையும் நீதியையும் விரும்புவோரும் வாழும் நாள் வரையில் காந்தியடிகளின் நினைவு இருக்கும்.

காந்தியாரைப் போன்றவர்களை மனித குலம் பெற்றெடுப்பது மிகவும் அரிது; வருங்காலத்தில் மக்கள் செலுத்தும் நன்றிதான் அவர்களுக்குக் கைமாறு.

சாதாரணமாக மனிதன் எந்த அளவுக்குப் பணிபுரிய முடியும் என்பதை நாம் அறிந்து வைத்திருக்கிறோம்; ஆனால், இதைவிட எல்லாம் மிகவும் அதிகமாக இந்தியாவுக்கு மட்டுமன்றி, உலகத்துக்கும் வழங்கிச் சென்றவர் காந்தியார்!

'காந்தி' என்ற பெயருக்கே, நீதி-- நேர்மை என்று பொருள்கள் வந்துவிட்டன! கொடுமைக்கு உட்பட்டிருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு அவரது பெயர் ஊக்கமளித்திருக்கிறது; சுதந்தர விளக்கை ஏற்றிச் சென்றிருக்கிறது.

அவரது நூற்றாண்டு விழாவின் போது அவரது அரும் பணிகளை இந்த உலகம் நினைவுகூர்ந்து, இந்த உலகை வாழ்வதற்கு மேலும் சிறந்த ஓர் இடமாக மாற்றும் பொருட்டு அவர் செய்த மாபெரும் முயற்சிகட்கு நன்றி செலுத்துகிறது.

மனித குலத்தையே அழிக்கும் வல்லமை பெற்ற அணு ஆயுதங்கள் உலக சமாதானத்தை அபாயத்துக்குள்ளாக்கியிருக்கும் இத்தருணத்தில், அன்பு -- உண்மை -- மாற்றாரின் உரிமைகட்கு மதிப்பு ஆகிய காந்தியின் அறிவுரைகள், முன் எப்போதையும்விட முக்கியத்துவம் பெறுகின்றன.

நிறம் -- இனம் -- அரசியல் கொள்கை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், 'சமாதான சக வாழ்வு வேண்டும்' என்று மக்கள் உணர்ந்து அதை ஏற்றுக் கொண்டால்தான் உண்மையான அமைதியும், முன்னேற்றமும் இருக்கமுடியும் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

அழிவைத் தவிர்த்து மனித குலத்தை முன்னேறச் செய்ய வேண்டுமானால், உலக மக்கள், காந்தியார் போன்றவர்களின் அறிவுரைகளுக்குச் செவி சாய்த்து, அவர்களது எச்சரிக்கைகளைப் புரிந்து கொண்டு அதன்படி நடக்கவேண்டும்.

தமது வாழ்நாளில் மனித குலத்தை இந்த அளவு நேசித்து, இந்த அளவு சேவை செய்த ஒரு மாமனிதர் வாழ்ந்தார் என்பதில் இந்தியா பெருமை கொள்ளலாம்.

"மனிதத் தொண்டுக்காக உடலைத் துறந்து மரணத்தை அரவணைத்துக்கொள்ளத் தயாராக இருக்கும் மனிதன்தான் உண்மையாக அன்பு செலுத்த முடியும்" என்று அவர் நம்பினார்; அதற்காகவே வாழ்ந்தார்!

சென்னை மாநகராட்சித் தேர்தல்:

கழக வேட்பாளர் பட்டியல்

வண்ணைத் தொகுதி

வட்ட எண் பெயர்

1. தண்டையார்பேட்டை
மு. வேதாசலம் எம் எல்.ஏ.

3. கிரேஸ் கார்டன்
பி. ஏ. என். இராசரத்தினம்

4. சஞ்சீவிராயன்பேட்டை
கே. எம். கண்ணபிரான்

5. மொட்டைத் தோட்டம்
கே. ஆறுமுகம்

8. இராயபுரம்
இரா. மு. மனோகரன்
எனும் ஆர். எம். பெருமாள்

9. மீனாட்சியம்மன்பேட்டை
வி. எஸ். ஆனந்தன்

10. பழைய வண்ணாரப்பேட்டை
த. வெங்கடேசன் எம்.சி.

துறைமுகத் தொகுதி

11. ஏழுகிணறு (வடக்கு)
ஜி. இலட்சுமிபதி எம்.சி.

12. அம்மன்கோயில் (வடக்கு)
வி. முனுசாமி எம்.சி.

13. முத்தியாலுப் பேட்டை
அ. செல்வராசன் எம்.சி.

15. மண்ணடி
கே. கிருஷ்ணமூர்த்தி

16. அம்மன்கோயில் (தெற்கு)
கே. கோவிந்தசாமி எம்.சி.

17. ஏழுகிணறு (தெற்கு)
கோ. செங்குட்டுவன்

19. கொத்தவால்சாவடி
ந. செயராமன்

பேசின்பிரிட்ஜ் தொகுதி

21. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
எல். பாலசுந்தரம்

24. கொருக்குப்பேட்டை
சு. மோகன்ராஜ்

25 குமாரசாமி நகர்
ஆர். ஆறுமுகம் எம்.சி.

27. பேசின்பிரிட்ஜ்
கி. எத்திராசன்

28. கொண்டித்தோப்பு
என். வி. என். சோமு
பி.ஏ., பி.எல்.

29. பெத்துநாய்க்கன்பேட்டை
சி. எஸ். கணேசன்

30. பெருமாள்கோவில்தோட்டம்
அரு. சக்கரபாணி

பூங்கா நகர்த் தொகுதி

32. பெருமாள்பேட்டை
கே. சுந்தரதாசன்

33 கண்ணப்பர் நகர்
மு. கன்னியப்பன் எம்.சி.

34. அன்பழகன் நகர்
மு. அ. அக்கீம்

35. ரூனி
டி.கிருஷ்ணமூர்த்தி எம்.சி.

36. பெரியமேடு
அ சுப்பிரமணியம்

37. யானைகவுனி
வி. சானகிராமன்

38. தேதாலி நகர்
ப. ஆசைமுத்து

39. எடப்பாளையம்
டபிள்யூ. பி பி. சுந்தரம்

40. பூங்கா நகர்
பொ. சு. இராமதாசு

பெரம்பூர்த் தொகுதி

41. வியாசர்பாடி
டி. இராகுவேலு

42. இளங்கோ நகர்
வி தனசேகரன்

43. பெரம்பூர்
வி. தணிகாசலம் எம்.சி.

44. திரு. வி. க. நகர்
கோ. லோகநாதன் எம்.சி.

45. வடியா நகர்
டி. நடராசன் எம்.சி.

46. டாக்டர் சத்தியவாணிமுத்து நகர்
மா. கன்னியப்பன்

48. டாக்டர் பெசண்ட் நகர்
தி. சு. நல்லதம்பி எம்.சி.

49. பட்டாளம்
சு. பாலன் எம்.சி.

புரசைத் தொகுதி

52. அகரம்
மா. மதுரை

53. சிறுவள்ளூர்
டி. எஸ். சீவரத்தினம்

55. காமாட்டையார் நகர்
வேலூர் நாராயணன்
எம்.ஏ., பி.எல்., எம் சி.

56. அயனுவரம்
ஆ. சண்முகம்

57. பன்னீர்செல்வம் நகர்
மலையப்பன்
எனும் ப. கு. பரமான்

58. மறைமலை அடிகள் நகர்
எம். மைனர் மோசஸ்
பி.ஏ , பி.எல்., எம்.சி.

59. அஞ்சுகம் அம்மையார் நகர்
ந. சு. மணி

60. புரசைவாக்கம்
தே. து. இராமானுசம்

எழும்பூர்த் தொகுதி

61 அண்ணா நகர்
சு. வே. தட்சணாமூர்த்தி

62. ஷெனாய் நகர்
என். எஸ். தேவராசன்

63. நுங்கம்பாக்கம்
எம். எஸ். இராமச்சந்திரன்

64. கீழ்ப்பாக்கம்
மோகனசுந்தரம்

65. சேத்துப்பட்டு
கா. முருகேசன்

66. கங்காதீசுவரர் கோயில்
நா. கணபதி பி.எஸ்.சி.பி.எல்.

67. டாக்டர் அம்பேத்கார் நகர்
ச. கன்னியப்பன் எம்.சி.

68. எழும்பூர்
கி. பாஸ்கரன் எம்.சி.

70. கோமளீசுவரன்பேட்டை
என். கே. சாகுல் அமீது

ஆயிரம்விளக்குத்தொகுதி

71. ஆயிரம் விளக்கு
பி. கே. கேசவன்

72. அழகிரி நகர்
எம் ஏ. ஜேசுதாஸ் எம்.சி.

78. பாலசுப்பிரமணியம் நகர்
சி. சிட்டிபாபு எம்.பி.

76. பாரதி நகர்
க. பார்த்தசாரதி

77. ஆஜாத் நகர்
ஏ. கி. புகழேந்தி

78. இராயப்பேட்டை
த. சதானந்தம்

79. பாரதிதாசன் நகர்
மு. அரங்கநாதன் எம்.சி.

80. கிருஷ்ணம்பேட்டை
டி. குப்புசாமி

திருவல்லிக்கேணிதொகுதி

81. ஆதிகேசவபுரம்
ப. க. வேணுகோபாலன்

82. சிந்தாதிரிப்பேட்டை
சி. வி. ஆடலழகன்

83. நரசிங்கபுரம்
வெ. குப்பம்மாள்

85. திருவட்டீசுவரன்பேட்டை
எஸ். எம். கிருஷ்ணன் எம்.சி.

86. சேப்பாக்கம்
சி. ஆதிகேசவன்

87. டாக்டர் நடேசன் நகர்
மு. வரதராசன்

88. ஜாம் பஜார்
பா. தாமோதரன்

90. மெரினு
எம். இராசு

மயிலாப்பூர்த் தொகுதி

91. விவேகானந்தபுரம்
எஸ். வி. வேலு

92. மாதவபெருமாள்புரம்
அ.சி. துளசிங்கம் எம்.சி.

93. காரனேசுவபுரம்
கே. கோவிந்தசாமி எம்.சி.

94. சாந்தோம்
இர. காசிச்சாமி

96. திருவள்ளுவர் நகர்
த. சாரங்கன்

97. பீமண்ணன்பேட்டை
அ. செல்வராசன் எம்.சி.

98. இராஜா அண்ணாமலைபுரம்
சு. அரி

99. அவ்வை நகர்
டி. கே. கபாலி எம்.சி.

100. அடையாறு
அ. ச. சங்கரன்

தியாகராய நகர் தொகுதி

101. கோ. சு. மணி நகர்
இரா. சம்பந்தம் எம்.சி.

103. நக்கீரர் நகர்
வை. பாலசுந்தரம்

107. கலைஞர் குருநிதி நகர்
சி பி.பவளவண்ணன் எம்.சி

109. சத்தியமூர்த்தி நகர்
இரா. சடகோபன் எம்.சி.

110. ஆழ்வார்பேட்டை
ஏ. லோகநாதன்

சைதாப்பேட்டை தொகுதி

111. அமைந்தகரை
செ. மோகனப்பா

112. பெரியார் நகர்
சி. வி. சிட்டிபாபு

113. வடபழனி
சோ. கி. மூர்த்தி

114. நாவலர் நெடுஞ்செழியன் நகர்
சா. கணேசன் எம்.சி.

115. எம்.ஜி.ஆர். நகர்
கோ. அய்யாவு

117. குமரன் நகர்
எஸ். பி. இரத்தினம்

118. சைதாப்பேட்டை
சைதை சம்பந்தம் எம்.சி.

119. ஜி. டி. நாயுடு நகர்
ஆர். எஸ். சீதரன்
எனும் பாண்டியன்

120. கிண்டி
ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.

★

தோழமைக் கட்சிகளுடன் உடன்பாடு கொண்டுள்ள வட்டங்கள் வருமாறு:—

முஸ்லிம் லீக்

14. வள்ளல் சீதக்காதி நகர்
26. டாக்டர் வியராகவலு நகர்
47. புளியந்தோப்பு
89. புதுப்பேட்டை
74. அமீர் மகால்
75. உமறுப்புலவர் நகர்
84. ரேடு நகர்

இடது கம்யூனிஸ்டு

22. ஜீவா நகர்
51. செம்பியம்

வலது கம்யூனிஸ்டு

2. ம. பொ. சி. நகர்
28. செரியன் நகர்

தமிழரசுக் கழகம்

50. தட்டாங்குளம்
89. திருவல்லிக்கேணி

திராவிடர் கழகம்

54. 'விடுதலை' குருசாமி நகர்
104. தேனுகேபேட்டை

உழைப்பாளர் கட்சி

7. சிங்காரத் தோட்டம்
108. வ. உ. சி. நகர்

சென்னை மாவட்டக் கழகத் தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் வேண்டுகோள்

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் தி. மு. கழகத்தின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களையும், உடன்பாட்டின் அடிப்படையில் தோழமைக் கட்சிகள் போட்டியிடக்கூடிய வட்டங்களையும் முடிவுசெய்யும் வகையில், கடந்த நான்கு நாட்களாக நடைபெற்ற கழகத் தேர்வுக் குழுவானது ஆய்வுக் குழுவினர் அளித்த விவரங்களையும், கழக ஆட்சி மன்றக் குழுவினர் அளித்த கருத்துக்களையும் கழகத் தலைமைக் குழுவினர் வழங்கிய பரிந்துரைகளையும் ஆய்ந்து தக்க முடிவினை எடுத்துள்ளது. அந்த முடிவின் அடிப்படையில், அந்தந்த வட்டங்களில் கழகத்தின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களும், தோழமைக் கட்சிகளுக்கு விட்டுக் கொடுக்கும் வட்டங்களின் விவரங்களும் அதிகாரபூர்வமாக வெளியிடப் பட்டுள்ளன.

கழகத்தின் சார்பாகப் போட்டியிட விண்ணப்பித்துக் கொண்ட அந்தந்த வட்டங்களிலே சார்ந்த ஏனைய தோழர்களும், அவர்களுக்குத் துணையாக நின்றவர்களும் தலைமைக் கழக முடிவை அன்போடு ஏற்று—முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்கி—அந்தந்த வட்டத்தில் கழக வேட்பாளர்க்கும், தோழமைக் கட்சி வேட்பாளர்களுக்கும் பெரு வெற்றியைத் தேடித் தரு மாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வரும் இந்த நேரத்தில், எப்பொழுதும்போல், அவர்கள் கற்றுத்தந்த கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற பண்புகளை மிக மேலாகப் போற்றிக் காப்பாற்றுவது, கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள் ஆகிய அனைவ ரதும் நீங்காக் கடமையாகும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அன்பன்,

இரா. நெடுஞ்செழியன்

1—10—68 தலைவர், தி. மு. க. ஆட்சிமன்றக் குழு

சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல் தள்ளிவைப்பு

30-9-68 அன்று காலை சேலம் நகர் வியசராகவாச்சாரியார் திடலில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த சேலம் மாவட்ட தி. மு. க. தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து நடைபெறும் நாள்—மற்றும் விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

மறைவு

சென்னை முதல் வட்டம் மக்கள் மறுமலர்ச்சி மன்றச் செயலாளர் மா. அரங்கநாதன், 15—9—68-ல் இயற்கையெய்தினார்; மறைந்த தோழரின் குடும்பத்தினருக்கு மன்றத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபமும், ஆறுதலும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சா. கணேசன் எழுதிய

'வால்கா விருந்து'

பேராசிரியர் அன்பழகன் தலைமையில் மு. பொ. சிவஞானம் வெளியிட்டார்

சென்னை, அக். 3—

சென்னை மாநகராட்சி உறுப்பினர் திரு. சா. கணேசன் எழுதிய 'வால்கா விருந்து' என்னும் நூல் வெளியீட்டு விழா, 1—10—68 மாலை எழும்பூர் பெரியார் திடலில் சிறப்பாக நடைபெற்றது.

பேராசிரியர் க. அன்பழகன் எம்.பி. அவர்கள் விழாவுக்குத் தலைமைவகித்தார்; தமிழரசுக் கழகத் தலைவர் திரு. மு. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்கள் நூலை வெளியிட்டார்.

சென்னையில் உள்ள இரஷ்யத் தூதுவரக அதிகாரி திரு. காவேரின் முதல் நூலை, திரு. மு. பொ. சி. அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டு, வாழ்த்துரை வழங்கினர்.

சோவியத் இரஷ்யாவில் உள்ள வால்கா கிராடு மாகராட்சியின் அழைப்புக்கிணங்கி, சென்னை மாகரராட்சியின் சார்பில் சென்ற தூதுக்குழுவில் ஒருவராகச் சென்று வந்த தோழர் சா. கணேசன், தமது பயண அனுபவங்களச் சுவைபட எழுதி, அதன், 'வால்கா விருந்து' எனும் தலைப்பில் நூலாக்கி வெளியிட்டுள்ளார்.

இந்த நூலைப் பாராட்டியும் வாழ்த்தியும், தோழர் சா. கணேசனின் எழுத்துப் பணியை மேலும் ஊக்கப்படுத்தும் வகையிலும் பேராசியர் அன்பு கணபதி, திருவாளர்கள் மீ. இராமலிங்கனார், காஞ்சி மணிமொழியார், கோ. பன்னீர்செல்வம் (தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச்செயலாளர்) ஆகியோர் பேசினர்.

வங்கத் தமிழர் சங்கச் சார்பில் மாணவர் இரா. சஞ்ர்த்தனம் ரூ 10 கொடுத்து ஒரு நூலை வாங்கிக் கொண்டு, நூலின் சிறப்பை எடுத்து விளக்கிப் பேசினர்.

மற்றும் அன்பர்கள் சிலர் ரூ. 101; ரூ. 100; ரூ. 60; ரூ 11—என்று பணம் கொடுத்து நூலைப் பெற்றுக்கொண்டனர்.

திரு. சா. கணேசன், பாராட்டுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

துவக்கத்தில் அழகிரி படிப்பகச் சார்பில் தோழர் மா. செங்குட்டுவன் அனைவரையும் வரவேற்புப் பேசினார்.

தோழர் சோ. கி. மூர்த்தி நன்றி கூறினர்.

இறுதியில் குடந்தை சீனிவாசனின், பாரதிதாசன் பாடல்களுடன் விழா இனிது முடிவுற்றது.

நகரசுத்தித் தொழிலாளருக்குப் 'பென்ஷன்'

பெங்களூர், அக். 3—

பெங்களூர் மாநகராட்சியில் பணியாற்றும் சுமார் 3,500 நகர சுத்தித் தொழிலாளருக்கு அற்பத ஆண்டு ஏப்ரல் 1-ம் நாளிலிருந்து 'பென்ஷன்' வசதி கிடைக்கும்.

காந்தி நூற்றண்டு விழா நாள் துவங்குவதையொட்டி மாநகராட்சி இம்முடிவை எடுத்தது.

நாட்டிலேயே மாநகராட்சி, இத்தகைய வசதியை அளிப்பது இதுவே முதல் தடவையாகும். இதனால் மாகராட்சிக்கு ஆண்டில் ஏற்படும் கூடுதல் செலவு ரூ. 7 இலட்சமாகும்.

மாநகராட்சியில் சுமார் 5 ஆயிரம் ஊழியர்கள் உள்ளனர்; 4-வது பிரிவு ஊழியர் உட்பட 1,500 பேருக்கு (பீயுன்கள், இதர கடைநிலை ஊழியர்) ஏற்கனவே, 'பென்ஷன்' வசதி உள்ளது.

நடக்க இருப்பவை

4--10--68

மானேஜிப்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு உப்பரிதைத் தெருவில்; தலைவர்: செ. மு. சாமி அய்யர்; பேசுவோர்: கோ. சி. மணி எம்.எல்.சி., கு. சுல்தான் எம்.சி., டி. கே. கோவிந்தன் எம்.சி., வி. சேதுராமன் பி.ஏ. பி.எல்., வி. எஸ். இராமலிங்கம்.

5--10--68

கடையநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மறுமலர்ச்சித் திடலில்; தலைவர்: நெ. மு. அகமது; பேசுவோர்: ஆலடி அருணா எம்.எல்.ஏ., பி. பத்மநாபன் எம்.சி., புது. சேதுராசு, விசுவம், சி. நடராசன், சி. சண்முகம், சம்சுதீன், இரா. செயலுகன், செ. கருப்பையா.

குமாரபாளையம்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: ஏ. எல். கே. தியாக ராசன்; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., எஸ். எஸ். எம். சுப்பிரமணியம், மற்றும் பலர்.

பெரியியல் முதலீட்டு நிறுவனத் திறப்பு விழா

அம்பத்தூர் தொழிற்பேட்டையில், 4—10—68 மாலை 5-30 மணிக்கு பொறியியல் முதலீட்டு நிறுவனத்தை, தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்துவைப்பார்; திரு. எல். டி. சோமசுந்தரம் எம்.பி., தலைமைவகிப்பார்.

ஆந்திர--கருநாடக மாநில அமைப்புகளின் தேர்தல்

வேட்பாளர்களுக்கு அறிவிப்பு

ஆந்திர மாநிலம், கருநாடக மாநிலம் ஆகியவற்றின் தி. மு. க. அமைப்புகளுக்கான தேர்தல்கள் முறையே அக்டோபர் 5, 6 ஆகிய நாட்களில் நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட நாட்களுக்குள் தலைமைக் கழகத்தில் சேர்ப்பிக்கப்படும் வேட்பாளர் விண்ணப்பத் தாள்களின் அடிப்படையிலேயே அந்தந்த மாநில தி. மு. க. அமைப்புகளின் தேர்தல்கள் நடைபெறும்.

வேட்பாளர் விண்ணப்பத் தாள்கள் கருநாடக மாநில அமைப்பாளரிடத்திலும், ஆந்திர மாநில அமைப்பாளரிடத்திலும் சீடைக்கும்.

—தலைமைக் கழகம் (நி. மு.க.)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

தென் வட்டாரம்

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 480/B3/68.69 நாள் 24—9—68

பின்வரும் வேலைக்காக உறைபின்மீது வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் குறிப்பிடப்பட்டு, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் 21—10—68 பிற்பகல் 3-மணிவரை வரவேற்கப்படுகின்றன.

தென் சென்னை புறநகர்த் திட்டத்தில் BP/SHB எண் 2/68-இன்படி இரண்டு அறைகள், இரண்டு அடுக்குகள் கொண்ட வாடகைக் குடியிருப்புகள் (Flats) அடங்கிய 10 கட்டிடங்கள் (பிளாக்குகள்) கட்டுதல்.

வேலையின் தோராய மதிப்பீடு	ரூ. 3,37,640
பொறுப்புத் தொகை	ரூ. 5,100

ஒப்பந்த விதிகள் மற்ற விவரங்கள் 7—10—68 முதல் எந்த அலுவல் நாளிலும் காலை 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இதே கையொப்பமிடுள்ளவரின் அலுவலகத்தில் ரூ. 15.15 (விற்பனை வரி உட்பட) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

ஒப்பந்தப் புள்ளிகள் அதே நாள் பிற்பகல் 3.05 மணிக்குத் திறந்து பார்க்கப்படும்.

எந்த ஒரு ஒப்பந்தப் புள்ளியையோ அல்லது அனைத்தையுமோ எந்தவிதக் காரணமும் காட்டாமலே ஏற்றுக்கொள்ளவோ, ரத்து செய்யவோ இதே கையொப்பமிட்டுள்ளவருக்கு அதிகாரம் உண்டு.

36, லஸ்ஸர் ரோடு, சென்னை-35

தலைவர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

திருப்பதியில் விமான நிலையம்

திருப்பதி, அக் 3—

திருப்பதியில் விமான நிலைய அமைப்புப் பணி அடுத்த ஆண்டு நிறைவு பெற்றதும் திருப்பதிக்கு விமானப் போக்குவரத்துத் துவக்கும்.

திருப்பதியுடன் சென்னை—பெங்களூர்—ஐதராபாத்தை இணைத்து விமானப் போக்குவரத்து நடைபெறும்.

விமான நிலையத்தை நிறுவத் தனது பங்காக திருப்பதி கோயில் நிர்வாகம் ரூ 15 இலட்சம் ஒதுக்கியிருக்கிறது.

விமான நிலையதை அமைக்க ரூ 83 இலட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநில அரசு 200 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்கியுள்ளது.

தமிழ் வரலாற்று -- தமிழ்க் கழக அமைப்பு மாநாடு

திருச்சி மாவட்டத் தமிழ்க் கழகச் சார்பில் தமிழ் வரலாற்று—தமிழ்க் கழக அமைப்பு மாநாடுகள் அக். 5, 6 ஆகிய நாட்களில் திருச்சி வேலர் மன்றத்தில் நடைபெறும்; முதல் நாள் காலை 9-மணிக்கு குடந்தை சுந்தரேசனாரின் தமிழ்த் தாய் வாழ்த்துடன் மாநாடு தொடங்கும்.

திரு. குன்றக்குடி அடிகளார் தொடக்கவுரையாற்றுவார்.

பேராசிரியர்கள் சொக்கப்பர், இராமச்சந்திரனார், மெ. சுந்தரம், பெருஞ்சித்திரனார், புலவர் சையத் நாசுதீன், செ. முத்து அடிகளாகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தமிழ் எழுத்தாளர் சங்க சிறப்புக் கூட்டம்

தமிழ் எழுத்தாளர் சங்கச் சிறப்புக் கூட்டம், 4—10—68 மாலை 6-மணிக்கு திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் பேராசிரியர் ந. சஞ்சீவி தலைமையில் நடைபெறும்; கலவி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், மற்றும் தோழர்கள் எல். டி. சோமசுந்தரம் எம்.பி., நடிகமணி டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., எம். ஆறுமுகசாமி, எஸ். வேம்பு ஆகியோர் தனித் தனித் தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவர்; வரவேற்புரை: கோ. பன்னீர்செல்வம்.

தமிழ் 'கா. சு.' நினைவு இலக்கியக் குழு

"குளித்தலையில் ஆண்டுதோறும் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை நினைவாக நடைபெறும் இலக்கிய விழாவை இவ்வாண்டு தமிழகமே பங்குகொள்ளும் அளவுக்கு மிகச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டு, அதற்கான செயற்குழு அமைப்புக் கூட்டம் 5—10—68 மாலை 5-மணிக்கு குளித்தலை கடம்பர் கோயில் 'அன்னிய'த்தில் நடைபெறும்"

என்று, அமைப்பாளர் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் அறிவிக்கிறார்.

சென்னை 113-வது வட்ட தி. மு. கழகம்

பொறுப்பாளர் நியமனம்

சென்னை 113-வது வட்ட தி.மு.க. பொறுப்பாளராக தோழர் இரா. ஆனந்தன் நியமிக்கப்பட்டிருப்பதாக சைதைப்பகுதிச் செயலாளர் தோழர் சைதை சம்பந்தம் அறிவிக்கிறார்.

இனி, 113-வது வட்டம் சம்பந்தமான கழக அலுவல்களுக்கு, தோழர் இரா. ஆனந்தனிடம் தொடர்புகொள்ளுமாறு கழகத் தோழர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

சமுதாய நலத் திட்டங்கட்கு பயன்படும் தமிழக அரசின் பரிசு சீட்டு

இனி மாதந்தோறும் குலுக்கப்படும்

அமைச்சர் செ. மாதவன் அறிவிப்பு

திருச்சி, அக். 3—

அடுத்த மாதத்திலிருந்து (நவம்பர்) ஒவ்வொரு மாதமும் பரிசுச் சீட்டு குலுக்கலே நடத்தத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் 4 அல்லது 5 வரிசை பரிசுச் சீட்டுக்கள் வெளியிடப்படும்.

ஒவ்வொரு வரிசையிலும் 9,99,999 டிக்கட்டுகள் உள்ளன.

இவ்விவரத்தைச் சட்ட அமைச்சர் செ. மாதவன், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

பரிசுச் சீட்டுத் திட்டத்தின்மீது முதலாவது குலுக்கல் சென்னை நகரில் அக். 14-ல் நடைபெறும்.

அரசு இதுவரை 8 வரிசை டிக்கட்டுகளை வெளியிட்டிருக்கிறது.

திரு. பி. சுக்ரா ரெட்டி தலைமையில் ஒரு குழுவும், திரு. கணபதி பின்னர் தலைமையில் மற்றொரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளன.

அக். 14-ல் நடைபெறவிருக்கும் குலுக்கலே இக்குழுக்கள் மேற்பார்வையிடும்.

"பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் நிகரப் பணம் சமூக நலத் திட்டங்களுக்குச் செலவிடப்படும்" என்று அமைச்சர் தெரிவித்தார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிவாற்றலில் எனக்கு இருந்தாலும், என் மொழி தமிழ்—என் நாடு தமிழ்நாடு—ஆகையால் நான் தமிழிலதான் பேசுவேன்.

அறிவு வளர்ச்சி பெற தாய் மொழியான தமிழும், மற்றவர்களின் கருத்தை அறிந்து கொள்ள ஆங்கிலத்தையும், நாம் அறிந்து கொண்டால் போதும்; மூன்றுவது மொழி நமக்குத் தேவையில்லை!"

பிரிட்டிஷ் தலைமையமைச்சருக்கு 'தலைவலி' தீர்மானம்

பிளாக்பூல், அக். 3—

பிரிட்டிஷ் ஆளும் கட்சியான தொழிற் கட்சியின் மாநாடு இங்கு கூடியபோது, 'ரஹிய முடக்கல் திட்டத்தைக் கைவிட வேண்டும்' என்று அரசினைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை நிறை வேற்றியது.

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 50,93,000 வாக்குகளும், எதிராக 11,24,000 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

"ஸ்டபிலின இந்த முடிவு, தலைமையமைச்சர் விலசனுக்கு ஏற்பட்ட மிகப் பெரும் தோல்வியாகும்" என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

தேர்தல் முன்னேற்பாடு ஏதுமுதிர்நிலை, இது- இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.! அவர்கள் ஆலோசனைப்படி, வெளியீடு பொறுப்பும், ஆர்வமும்கொண்ட வனுமே அச்சகத்தில் (24, ஆண்டிமுதலியார் சென்னை-1) அச்சிட்டு, 'தென்னகம்' 10 சென்னை-10 என்ற முகவரியிலிருந்து